பக்கங்கள் - 11
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
மின்னிதழ்
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk
சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 23 வெள்ளிக்கிழமை (05.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 169

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
021 720 1005
இல. 44, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1000/= + 300/=
மட்டுமே

## நேற்று மட்டும் 62 தொற்றாளர்கள்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் 62 பேர் நேற்று அடையாளம்காணப்பட்டுள்ளனரென சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் 02

## கிளிநொச்சியில் வயோதிபர் மீது தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஆவாகுழு என தம்மை அடையாளப்படுத்திய குழுவொன்று வயோதிபர் மீது கொடூரத் தாக்குதலை நடத்தியுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் மேற்கில் வசிக்கும் 72 வய 02

# கருத்துச் சுதந்திரத்தை இலங்கை அரசு கட்டுப்படுத்தியுள்ளது



### ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் கவலை

(ஜெனிவா)

இலங்கை அரசை விமர்சிப்பவர்கள் கண்மூடித்தனமாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுகின்றனர். கருத்துச் சுதந்திரத்தை இலங்கை அரசு கட்டுப்படுத்தியுள்ளது என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் கவலை வெளியிட்டுள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## உழவு இயந்திரச் சில்லுக்குள் சிக்குண்ட குடும்பஸ்தர் உயிரிழப்பு

### கிளிநொச்சி முறிப்புப் பகுதியில் சம்பவம்

(கிளிநொச்சி)

உழவு இயந்திரத்தின் மட்காட்டில் இருந்து பயணம் செய்த குடும்பஸ்தர் ஒருவர் தவறி விழுந்து சில்லுக்குள் சிக்குண்டதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் கிளிநொச்சி முறிப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் கிளிநொச்சி 8ஆம் வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நல்லதம்பி யோகேஸ்வரன் என்ற இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

உழவு இயந்திரத்தின் முன் பகுதியில் சாரதிக்கு அரு 02

## இராணுவ ஆட்சிக்கு அரசாங்கம் வித்திட்டுள்ளது

### லக்ஷ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுயாதீனமாக இயங்கிவரும் அரச துறையை இராணுவத்தின் தலைமைத்துவத்திற்கு கீழ் அரசாங்கம் கொண்டுவந்துள்ளது.

இது அரசியலமைப்புக்கு முரணான செயற்பாடு என்று குற்றஞ்சாட்டிய ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல 02

சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைய

## தேர்தல் ஒத்திகை ஞாயிறு இடம்பெறும்

(கொழும்பு)

2020 பொதுத் தேர்தலை நடாத்துவதற்கான வாக்களிப்பு ஒத்திகை நிகழ்வு நாளை மறுதினம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தெரிவு செய்யப் 02

## ஒகஸ்ட் இறுதிக்குள் தேர்தல் நடாத்தப்படும்

### மகிந்த தேசப்பிரிய மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஒகஸ்ட் மாத இறுதிக்கு முன்னதாக நாட்டில் பொதுத் தேர்தல் நடாத்தப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய 02

## கெரோயினுடன் அச்சுவேலியில் ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

கெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 5 பேர் அச்சுவேலி பொலிஸாரால் கைது 02

## பாடசாலைகள் மீள ஆரம்பிப்பது தொடர்பில் அடுத்தவாரம் முடிவு

### கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும



(கொழும்பு)

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் எதிர்வரும் 10ஆம் திகதிக்குள் அரசு முடிவு செய்யும் என கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அமைச்சர் 02

## மைதானத்தில் விளையாடிய 10 இளைஞர்கள் நாவற்குழியில் கைது

(யாழ்ப்பாணம்)

நாவற்குழிப் பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறினார்கள் எனும் குற்றச்சாட்டில் 10 இளைஞர் 02

## எதிர்வரும் திங்கள் முதல் ரயில் சேவைகள் ஆரம்பம்

### இன்டர்சிற்றி ஆரம்பிப்பதில் தாமதம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் 8ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தொடருந்து சேவைகள் வழமைக்குத் திரும்பும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. சாதாரண நேர அட்டவணையின்படி தொட 02

மணலை அதிக விலைக்கு

## விற்போரின் உரிமத்தை ரத்து செய்ய தீர்மானம்

(கொழும்பு)

அதிக விலைக்கு மணலை விற்கும் வாகன உரிமையாளர்களின் உரிமங்கள் ரத்து செய்யப்படவுள்ளதாக புவிச் 02

## விற்போரின்...

சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

மணல் அகழ்வு மற்றும் போக்குவரத்து உரிமத்தைப் பெற்றுள்ள வாகன உரிமையாளர்கள், மணலை பதுக்கி வைப்பதுடன், அதிக விலைக்கு விற்பனை செய்வதாகக் கிடைத்துள்ள முறைப்பாடுகளையடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பணியகம் சுட்டிக்காட்டியுளளது.

மணலை அதிக விலைக்கு விற்பனை செய்வோர் தொடர்பில் பொதுமக்கள் தங்களது மாவட்டத்தில் உள்ள புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்துக்கு அறிவித்தால் கொள்ளை இலாபம் பெறும் வியாபாரிகளின் உரிமத்தை ரத்துச் செய்ய முடியும் என்றும் பணியகம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## உழவு இயந்...

கில் பயணம் செய்த போதே, குறித்த நபர் தவறி வீழ்ந்து சக்கரங்களுக்குள் சிக்கிக் கொண்டார்.

இதனையடுத்து, கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் வீடொன்றின் வேலியை, பிய்த்துக் கொண்டு கோழிக் கூட்டின் மீது மோதியுள்ளது. இதனால், கூட்டிலிருந்த 30 கோழிகளும் உயிரிழந்துள்ளன.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,60,100)

## கெரோயினு...

செய்யப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி பத்தைமேனி பகுதியில் நேற்று மாலை சந்தேக நபர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 2 கிராம் 450 மில்லிக்கிராம் எடையுள்ள கெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் ஐவரும் 20 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர்கள் ஐவரும் விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதவான் முன்னிலையில் இன்று முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

## தேர்தல் ஒத்...

பட்ட கிராமங்களில் இடம்பெறவுள்ளது.

இந்த தகவலை தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய பொதுத் தேர்தல் வாக்களிப்பை முன்னெடுப்பது தொடர்பில் இந்த ஒத்திகை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை பொதுத் தேர்தலுக்கான திகதியை நிர்ணயம் செய்வதற்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் தேர்தல் அதிகாரிகள் மற்றும் சுகாதார அதிகாரிகளால் இந்த ஒத்திகை முன்னெடுக்கப்படுகிறது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறினார். (ம-3)

## இராணுவ ஆட்சிக்கு அரசாங்கம் வித்திட்டுள்ளது...

அரசாங்கம் படிப்படியாக இராணுவ ஆட்சிக்கு வித்திட்டு வருவதாகவும் இது எதிர்காலத்தில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் எனவும் எச்சரித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

அரசியலமைப்பின் படி அரச சேவையானது சுயாதீனமாக இயங்க வேண்டிய துறையாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் பாதுகாப்புச் செயலாளர், பதில் பொலிஸ்மா அதிபர், இராணுவத் தளபதி உள்ளிட்ட 13 இராணுவத்தினரை கொண்ட ஜனாதிபதி செயலணியின் ஆணைக்கமைய அரசதுறை இயங்க வேண்டும் என்று குறிப்பிட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இராணுவ ஆட்சியை முன்னெடுப்பதற்கான திட்டங்களில் ஒன்றாகவே இதனை கருதமுடிகின்றது. அரசதுறையினர் என்றுமே இராணுவத்தினரையும் விட உயர்மட்டத்தில் வைத்து பார்க்கப்பட்டு வருபவர்கள் இவர்களை இன்று இராணுவத்தினரின் ஆணைக்கு அமைவாக செயற்படுமாறு இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு செயற்படாவிட்டால் அவர்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் பெரும் அனர்த்தத்தை ஏற்படுத்தும்.

ஒருநாடு பொதுச் சட்டம் என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் அதனை முறையாக பின்பற்றுகின்றார்களா? தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டம் எல்லோருக்கும் சமமான முறையில் செயற்படுத்தப்படுகின்றதா? நாட்டு மக்களுக்கு ஒரு வகையிலும் ஆட்சியாளர்களுக்கு ஒருவகையிலும் இந்த சட்டம் செயற்படுவதை அண்மையில் அவதானிக்க கூடியதாக இருந்தது.

இவ்வாறு இந்த சட்டங்கள் மீறப்பட்ட போது கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியில் உறுப்பினர்கள் தலைமறைவாகினர்.

தொலைக்காட்சி முன்னிலையில் வந்து நாட்டு மக்களுக்கு பல்வேறு உத்தரவுகளை விடுத்து வந்த அவர்கள் அந்த குறிப்பிட்ட தினங்களில் எங்கிருந்தார்கள் என்றுகூட தெரிந்துக் கொள்ள முடியாமல் இருந்தது என்றார். (ம-3)

## மைதானத்தில்...

கள் நேற்று சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு திகதியும் வழங்கப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும் ஊரடங்கு சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் நாவற்குழி பகுதியில் உள்ள மைதானம் ஒன்றில் இளைஞர்கள் விளையாடிக்கொண்டு இருந்த போது, பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 10 இளைஞர்களையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்ற பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் இளைஞர்களை கடுமையாக எச்சரித்து, பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர். (ம-3)

## நேற்று மட்டும்...

எண்ணிக்கை 1,797 ஆக அதிகரித்துள்ளது.

947 பேர் சிகிச்சை பெற்று வருவதுடன், 839 பேர் குணமடைந்துள்ளனர். அத்துடன், இலங்கையில் இதுவரை 11 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். (ம-3)

## எதிர்வரும் திங்கள் முதல்...

ருந்து சேவைகள் இடம்பெறும் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் கொழும்பு பதுளை இடையேயான தேனுவாரா மெனிகே தொடருந்து சேவை மற்றும் கொழும்பு - காங்கேசன்துறை இடையிலான குளிரூட்டப்பட்ட நகர் கடுகதி (இன்டர் சிற்றி) தொடருந்து சேவை ஆகிய இரண்டும் எதிர்வரும் 8ஆம் திகதி இடம்பெறாது என்று ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த மார்ச் 20ஆம் திகதி தொடக்கம் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகளையடுத்து அன்றைய தினத்திலிருந்து தொடருந்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டன. எனினும் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் கடந்த மாதம் தொடக்கம் இடம்பெற்றன.

இந்த நிலையில் ஜூன் 8ஆம் திகதி முதல் பொதுப் போக்குவரத்தை மீண்டும் தொடங்க அரசு முடிவு செய்துள்ள நிலையில், தொடருந்து சேவைகள் சாதாரண கால அட்டவணைப்படி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## பாடசாலைகள் மீள ஆரம்பிப்பது...

இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் கல்வி மற்றும் சுகாதார அமைச்சுகளுக்கு இடையில் கலந்துரையாடல் இன்னும் இடம்பெற்றுவருகின்றன. எனினும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

கல்வி அமைச்சின் குழு ஒன்று அண்மைய நாட்களில் அனைத்து மாகாணங்களுக்கும் சென்று பாடசாலைகளுக்கான சுகாதார வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.

பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டதும் இவ்வாறு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் இது குறித்து அனைத்து தனியார் மற்றும் அரச பாடசாலை அதிபர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும்போது, அவர்களில் பலர் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துகிறார்கள். அவர்களால் பாடசாலை மற்றும் பேருந்துகளில் சமூக விலகலை கடைபிடிக்க முடியாது.

சுகாதார அதிகாரிகளின் கருத்துப்படி, கொரோனா தாக்கம் இருந்தால்கூட அதன் ஆணிவேரை கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும். அதனால்தான் ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்தனியாக போக்குவரத்தை ஒதுக்க முடியுமா என்பது குறித்து ஆலோசித்து வருகின்றோம். இது ஒரு சுலபமான காரியம் அல்ல. இருப்பினும் நாங்கள் அதைச் செய்ய முயற்சிக்கிறோம்.

அத்தோடு பாடசாலைகளுக்கு குறிப்பிடப்பட்டுள்ள சில வழிகாட்டுதல்களில் ஒவ்வொரு வகுப்பறையிலும் நாற்காலிகள் இடையேயான தூரம், மாணவர்கள் அடிக்கடி கைகளை கழுவுதல் மற்றும் முகக்கவசம் அணிவதை உறுதி செய்தல் ஆகியவை அடங்கும்.

இருப்பினும், ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு, சுகாதார அதிகாரிகளின் ஆலோசனை பெறப்பட்டுள்ளது, ஏனெனில் அவர்கள் முகக்கவசம் அணிவது நடைமுறையில் இருக்காது என்றார். (ம-3)

## ஓகஸ்ட் இறுதிக்குள் தேர்தல் நடத்...

தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்று வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுத் தேர்தல் நடாத்துவது குறித்து சில ஊடகங்களில் பல்வேறு திகதிகள் ஊகங்களாக வெளியிடப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி மற்றும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி நடாத்தப்படும் என ஊகம் வெளியிடப்பட்டுள்ள போதிலும் தேர்தல்கள் ஆணைக்குழு அவ்வாறு எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர் நீதிமன்றில், தேர்தல் கள் ஆணைக்குழு அளித்த உறுதிமொழிக்கு அமைய ஓகஸ்ட் மாத இறுதிக்குள் தேர்தல் நடாத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் ஜூலை அல்லது ஓகஸ்ட் மாதத்தில் நடைபெறும் என்பதனை மட்டுமே தற்போதைக்கு கூற முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வயோதிபர் மீது தாக்குதல்...

தான சிதம்பரப்பிள்ளை சின்னதம்பி என்பவரது வீட்டிற்கு கடந்த 2 ஆம் திகதி இரவு நுழைந்த 7 பேர்கொண்ட குழுவொன்று தம்மை ஆவா குழு என தெரிவித்துள்ள நிலையில் வீட்டினுள் இருந்த கதிரைகள் உட்பட பொருட்களை சேதப்படுத்தியுள்ளதுடன் வயோதிபர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதன்போது வயோதிபரை குறித்த வீட்டில் வசிக்கக் கூடாது என எச்சரித்த தாக்குதல்தாரிகள் அவரை யாழ்ப்பாணத்தில் வரணிப்பகுதியில் உள்ள அவரது மற்றைய வீட்டிற்கு செல்ல வேண்டும் எனவும் தெரிவித்து சென்றுள்ளனர்.

இந்நிலையில் இது தொடர்பில் நேற்று முன்தினம் 3 ஆம் திகதி தருமபுரம் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் நேற்று 4 ஆம் திகதி சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் அப்பகுதியில் இருந்து கத்தி, வாள் மற்றும் கூரிய ஆயுதங்களையும் மீட்டுள்ளனர். (ம-3,312)

## இலங்கை அரசு கட்டுப்படுத்தி...

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், உண்மைக்கு புறம்பான செய்திகள் பரப்பப்படுதல் தொடர்பாக அனைத்து நாடுகளாலும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறிப்பிட்ட அளவில் பேணப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில், கோவிட் - 19 தொடர்பான அரசாங்கத்தின் குறைபாடுகளை சுட்டிக்காட்டுதல், உண்மைக்குப் புறம்பான செய்திகளை பரப்புதல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என பதில் பொலிஸ்மா அதிபரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஏப்ரல் 25ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பொலிஸ் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில், அரசாங்கத்தை விமர்சிப்பதன் அடிப்படையில் எவராவது கைது செய்யப்பட்டால் அது அரசியல் யாப்புக்கு எதிரான செயற்பாடு என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், எனினும் இலங்கையில் சமூக வலைத்தளங்களில் தவறான கருத்துக்களை பதிவிட்ட குற்றச்சாட்டில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இப்பிராந்திய நாடுகளில் ஏற்கனவே பொய்யான செய்திகள், மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளை எழுப்பும் ஊடகங்கள், சமூக வலைத்தளங்களை கண்காணிக்கும் சட்டங்கள் காணப்படுகின்றன என்றும், எனினும் அவை அரசாங்கத்தை விமர்சிக்கும் வகையிலான முறையான பேச்சுகள், விமர்சனங்கள் ஆகியவற்றை தடுப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன என்றும் இவ்வாறான நடவடிக்கைகள் சட்டபூர்வமான தன்மை, தேவை, சட்டம் ஆகிய கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுவதற்கான அணுகுமுறையாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கோவிட் - 19 நெருக்கடியை அடுத்து, அரசாங்கத்தின் பதிலை விமர்சிக்கும் நபர்களை தன்னிச்சையாக கைதுசெய்து தடுத்து வைப்பது அல்லது தொற்று பற்றிய தகவல்கள் அல்லது கருத்துக்களைப் பகிர்வது ஆகியவற்றை மேலும் கட்டுப்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் ஊடகங்கள், சமூக ஊடகங்கள் மூலம் அதிருப்தியை வெளிப்படுத்தியதாக அல்லது தவறான தகவல்களை பரப்பியதாக பங்களாதேஷ், கம்போடியா, சீனா, இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, மியன்மர், நேபாளம், பிலிப்பைன்ஸ், இலங்கை, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நிலையற்ற காலகட்டத்தில் தவறான தகவல்களின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கலாம், ஆனால் கருத்துச் சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-3)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

### சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுடன்

# பொன்.சிவகுமாரனின் நினைவேந்தல் உரும்பிராயில் நாளை அனுஷ்டிப்பு

(குப்பிழான்)

ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியும் முதற் தற்கொடையாளருமான தியாகி பொன். சிவகுமாரனின் 46ஆவது ஆண்டு நினைவேந்தல் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை காலை 09.30 மணி முதல் உரும்பிராய்ச் சந்தியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.



பொன். சிவகுமாரன் உயிர்த் தியாகம் செய்த தினம் இன்றைய தினம் (05) நாட்டில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமையால் நாளைய தினம் அஞ்சலி நிகழ்வு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அகவணக்கத்தினைத் தொடர்ந்து பொன்.சிவகுமாரனின் குடும்பத்தினரால் பொது ஈகைச் சுடர் ஏற்றப்படும். அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் செலுத்துதலும் நடைபெறும்.

இம்முறை உரைகள் எதுவும் இடம்பெற மாட்டாது. உரிய சுகாதாரப் பாதுகாப்பு ஏற்பாடுகள், சமூக இடைவெளியுடன் அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகளை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

ஏற்கெனவே, அஞ்சலி நிகழ்வு இடம்பெறும் பொன். சிவகுமாரனின் உருவச் சிலை அமைந்துள்ள பகுதியில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தொற்று நீக்கமும் செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் கலந்து கொள்பவர்கள் முகக் கவசங்களை அணிந்திருப்பது கட்டாயமானதாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3,18,350)

### கிளிநொச்சிப் பகுதியில்

# 9 கஞ்சா செடிகள் பொலிஸாரால் மீட்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் சூட்சுமமான முறையில் வளர்க்கப்பட்ட சுமார் 4.5 அடி உயரம் கொண்ட 09 கஞ்சாச் செடிகள் கிளிநொச்சிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.



கிளிநொச்சி நகரை அண்மித்த ஆனந்தபுரம் பகுதியில் மேற்படி கஞ்சாச் செடி வளர்க்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் கிளி நொச்சி பொலிஸ் நிலையத்தின் சிறுகுற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி பிரதீபனுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து பொலிஸ் நிலையத்தின் சிறுகுற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ்.பிரதீபன் தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைந்து, நேற்று மேற்கொண்ட நடவடிக்கையின் போது மிகவும் சூட்சுமமான முறை யில் வீட்டு வளவில் வளர்க்கப்பட்ட சுமார் 4.5 அடி உயரம் கொண்ட 09 கஞ்சா செடிகள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை குறித்த இச்செடிகளை வளர்த்த சந்தேகத்தில் ஒருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3,315)

# இனந்தெரியாத நபர்களால் முச்சக்கரவண்டி எரிப்பு

### யாழ்.இணுவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்று இனந்தெரியாத நபர்களினால் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளரால் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இணுவில் பாலாவோடைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது.

இதனால் முச்சக்கரவண்டி பகுதியளவில் எரிந்துள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-3,104,114)

# முருகேசு சிவசிதம்பரத்தின் 18ஆவது ஆண்டு நினைவு தினம்

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் உடுப்பிட்டிச் சிங்கம் என அனைவராலும் அழைக்கப்பட்ட முருகேசு சிவசிதம்பரம் அவர்களின் (சிவாவின்) 18ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணி அளவில் நடைபெறும்.

நெல்லியடி நகரில் அமைந்திருக்கும் முருகேசு சிவசிதம்பரம் அவர்களின் சிலைக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையின் தலைவர் க.இளங்கோ மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்துவார். (ம-3,60)

### சண்டிலிப்பாய் பகுதியில்

# வீடு புகுந்து திருட்டு!

### சந்தேகநபர் நேற்றுக் கைது

(யாழ்ப்பாணம்)

வீடு புகுந்து தங்க நகைகளைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் நேற்று முன்தினம் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த பெப்ரவரி மாதம் சண்டிலிப்பாய் பகுதியிலுள்ள வீடொன்றில் 5 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டன.

இச்சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகநபர் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்று முன்தினம் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

விசாரணைகளின்போது திருடப்பட்ட நகைகள் கோப்பாயில் விற்கப்பட்டது தெரியவந்தது.

இந்நிலையில் தங்க நகைகளில் ஒரு பகுதி மட்டும் மீட்கப்பட்டது.

குறித்த சந்தேகநபர் மேலும் சில திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,8)

# இரத்ததானம்

(குப்பிழான்)



நாவற்குழி சித்தி விநாயகர் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் "விதையனைத்தும் விருட்சமே" செயற்றிட்டத்தின் அனுசரணையில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணிவரை மாபெரும் இரத்ததான முகாம் மேற்படி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-3,18)


வேலையாட்கள்

**தேவை**

மண்டான், கரணவாயில் பண்ணையுடன் கூடிய தோட்டத்தில் வேலை செய்யக்கூடிய ஆட்கள் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.
**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு, தங்குமிடம் இலவசம்.**

தொடர்புகளுக்கு:-
இராசதுரை : 00491764106 5227
(ஜேர்மனி) 00490163008 1656
ஜெகன் : 0779202847
(இலங்கை)
(C-9668)





இதுநாள் வரை இப்படி இருந்தோமோ என்று நேற்றைய பொழுதினை நினைத்துக் கவலையுறாமல், இன்று இப்படி மாறுவோம் என திடசங்கல்பம் செய்வோம்.
– ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரவையின் கருத்து மீது கவனம் செலுத்துங்கள்

தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கமாக அமையப் பெற்றதன் காரணமாக, ஜனநாயக ரீதியில் அகிம்சை வழியில் தமிழ் மக்களின் எண்ணக்கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

அந்த வகையில் தமிழ் மக்கள் பேரவை நடத்திய எழுக தமிழ் எழுச்சிப் பேரணி உலகம் முழுவதிலும் பேசுபடு பொருளாயிற்று.

அரசியல் என்பதைக் கடந்து மக்கள் இயக்கமாகப் பரிணமித்துள்ள தமிழ் மக்கள் பேரவையின் கடந்த கால செயற்பாடுகளுக்கு தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பும் ஆதரவும் இருந்ததை எவரும் மறுதலிக்க முடியாது.

தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகளை கையாளும் பொருட்டு உபகுழுக்களை அமைத்து அவற்றை இயங்கு நிலைப்படுத்துகின்ற வேளையில், உலகம் முழுவதையும் முடக்கிக் கொண்டுள்ள கொரோனாத் தொற்று பேரவையின் செயல் நிலையிலும் சில தாமதங்களை ஏற்படுத்தவே செய்தது.

இத்தகைய தாமத நிலைகள் பொதுவானவையாக இருக்கின்ற போதிலும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் பேரவை விடுத்த அறிக்கை மீது ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

அதாவது சமகாலத்துச் சூழ்நிலைகள் சரியில்லை எனக் கருதி எமது அரசியல் அபிலாசைகளைக் கைவிடுவது அர்த்தமற்றதும் ஆபத்தானதுமாகும் எனத் தமிழ் மக்கள் பேரவையின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இங்குதான் பேரவையின் எச்சரிக்கை குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும்.

கொரோனா தொற்றுக் காலம் சாதாரண இயங்குநிலையை முடக்கிவிட்டது என்பது உண்மையாயினும் கொரோனாத் தொற்று ஏற்பட்ட இக்காலப்பகுதியில் எம் தமிழ் மக்களிடையே உணர்வுபூர்வமாக எழுந்த பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறம் வேறு எந்த மக்கள் சமூகத்தாலும் நினைத்துப் பார்க்க முடியாததாகும்.

ஆம், எங்கள் தமிழ் மக்கள் – எங்கள் உறவுகள் கொரோனாத் தொற்றினால் தொழில் இழந்து வருமானம் இழந்து வீடுகளுக்குள் முடங்கி இருக்கின்றனர் என்றபோது,

தனிநபர்களாக, புலம்பெயர் உறவுகளாக, பொது அமைப்புகளாக, சமய சமூக அமைப்புகளாக வீறுகொண்டெழுந்து நிவாரண உதவிகளை வழங்கியமை நினைத்துப் பார்க்க முடியாத பரோபகாரமாகும்.

இங்குதான் தமிழ் இனத்தின் ஒற்றுமையும் உதவிக்கரம் நீட்டி தூக்கிவிடுகின்ற மனத் தூய்மையும் எங்கள் இனத்தின் பெரும்பலமாக உள்ளதென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பலம் இருக்கும்போது; நாம் பின்னடைந்து விட்டோம். தளர்ந்துவிட்டோம். சூழ்நிலை சரியில்லை என்று நினைத்து எமது அரசியல் அபிலாசைகளை கைவிட்டுவிடாதீர்கள் என்பதை தமிழ் மக்கள் பேரவை மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளது.

பேரவையின் இக்கருத்துக் குறித்து நாம் அனைவரும் நடுநிலை நின்று சிந்தித்து செயல் வழிப்படுத்துவது மிக மிக அவசியமாகும்.

# மக்கள் ஆணை கிடைக்காவிட்டால் எதிர்க்கட்சியாகச் செயற்படுவோம்

### தயா கமகே திட்டவட்டம்

(கொழும்பு)

மக்கள் ஆணை கிடைக்காவிட்டால், நாம் எதிர்க்கட்சியாக செயற்படுவோம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயா கமகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "செப்டெம்பர் மாதமளவில் தேர்தலை நிச்சயமாக நடத்தியே ஆக வேண்டும். ஐக்கிய தேசியக்கட்சி எந்தக் காரணங்களைக் கொண்டும் தேர்தல்களுக்கு அஞ்சும் ஒரு கட்சியல்ல என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

முன்னாள் பிரதமரான டி.எஸ்.சேனநாயக்க இந்தக் கட்சியை ஆரம்பித்தமைக்கான நோக்கமே நாட்டின் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றத்தான். எமக்கான மக்கள்ஆணை கிடைக்காவிட்டால், நாம் எதிர்க்கட்சியாக செயற்படுவோம்.

எனவே, ஐக்கிய தேசியக் கட்சிக்கு பொதுத் தேர்தலைப் பார்த்து அஞ்ச வேண்டிய தேவை என்றும் கிடையாது. அரசியலில் தூய்மையானவர்களும், மோசடியாளர்களும் எல்லாக் கட்சிகளிலும் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

சிலர் 225 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நிராகரிப்பதாக கூறுகிறார்கள். ஆனால், இந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போதும் பொதுத் தேர்தலில் வேட்பாளர்களாகத் தான் களமிறங்கியுள்ளார்கள். மக்கள்தான் இவர்களை தெரிவு செய்ய வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார். ((ஜ-4)

## அகிம்சையின் தந்தைக்கு அமெரிக்காவில் அவமரியாதை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதரகம் அருகே மகாத்மா காந்தி சிலை மர்ம நபர்களால் சேதப்படுத்தி அவமதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் கறுப்பினத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் ஃபிலாய்ட் என்பவர் பொலிஸ் பிடியில் கொல லப்பட்டதால், கறுப்பின மக்கள் நீதி கேட்டு தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

உயர்பாதுகாப்பு கொண்ட வெள்ளை மாளிகை அருகேயும் தினமும் போராட்டம் நடைபெறுகிறது. இந்தப் போராட்டங்களில் கடும் வன்முறை வெடித்துள்ளது. போராட்டக்காரர்களை ஒடுக்க முடியாமல் பொலிஸார் திணறி வருகின்றனர்.

இந்நிலையில், வோஷிங்டனில் உள்ள இந்திய தூதரகம் அருகே உள்ள காந்தி சிலை சேதப்படுத்தப்பட்டு அவமதிக் கப்பட்டுள்ளது.

காந்தி சிலையை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்ட நபர்கள் யார்? என்பது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். போராட்டக்காரர்கள் இந்த செயலில் ஈடுபட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (2-5)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மதமும் அரசியலும்

மதத்தின் பங்கு ஒருவரை நேர்மையும் அன்பும் உள்ளவராகச் செய்வதாகும். அரசியல் என்றால் மக்கள் அவர்களது நலம் இவற்றில் கவனம் கொள்வது ஆகும். மதமும் அரசியலும் சேர்ந்து இல்லாத போது நேர்மையற்ற அரசியல்வாதிகளையும் போலித்தனமான மதத்தலைவர்களையும் நீங்கள் பெறுகிறீர்கள்.

நேர்மையும் அன்பும் உள்ள மத நம்பிக்கையுடைய ஒருவன் சகல மக்களுடைய நலத்திற்கும் கண்டிப்பாகக் கவனம் செலுத்துவான். அதனால் அவன் ஒரு உண்மையான அரசியல்வாதியாகிறான். ஒரு உண்மையான அரசியல்வாதி நேர்மையும் அன்பும் உள்ளவராகத் தான் இருக்க முடியும். அவர் மத நம்பிக்கையுடையவராக மட்டுமன்றி வேறெதுவுமாக இருக்க முடியாது. எல்லா அவதார புருஷர்களும் தீர்க்கதரிசிகளும் மக்களை அக்கறையுடன் கவனித்துக் கொண்டே வந்திருக்கின்றனர். அதனால் அரசியலில் இருந்தனர். இதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுக்களை நீங்கள் பார்க்கலாம். (தொடரும்)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**ஒழுக்கம் போர்க்களம் போன்றது. நாம் ஒழுக்கத்தோடு வாழ வேண்டுமானால் ஓயாமல் மனதோடு போராட வேண்டும். - ஓஷோ**

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

**கருணை வடிவமான கடவுள் வாள், வேல் முதலிய ஆயுதங்களை ஏந்தியிருப்பது கொடுமையின் அடையாளம் அன்று. வேல் என்பது ஞானம். அறிவுக்கு மூன்று இலக்கணங்கள் உள்ளன.**

**1.ஆழம் 2.அகலம் 3.கூர்மை**

**வேலின் அடிப்பகுதி ஆழமாக இருக்கிறது. நடுப்பகுதி விசாலமாக இருக்கின்றது. நுனிப்பகுதி கூர்மையாக இருக்கிறது.**

**"ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என்பார் மணிவாசகர்.**

**எனவே ஞானமாகிய கருவிகளை இறைவன் வைத்திருப்பது நமக்கு ஞானங்களை வழங்கும் பொருட்டு இவைகளை நுணித்து உணர வேண்டும். (தொடரும்)**

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** குளப்பிட்டி ஆனைக் கோட்டை வீதி, தமிழ்க் கலவன் பாடசாலை பிரதேசம், வராகி கொக்குவில், சாவல்காடு பிரதேசம், காக்கைதீவு ஒரு பகுதி, ஆனைக்கோட்டை பிரதேசம், ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவிலடி, கலையரசி வீதி, நவாலி சென் பீற்றஸ் தேவாலயம், வேலக்கைப் பிள்ளையார் கோவிலடி, அட்டகிரி, நவாலி, சுன்னாகம் கொத்தியாவத்தை, கந்தரோடை, ஐயனார் வீதி, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, அராலிப் பிரதேசம், செட்டியார்மடச் சந்தி, கரம்பிட்டி பிள்ளையார் கோவிலடி, அராலி ஐயனார் கோவிலடி, அராலி கொலனி, அராலி சரஸ்வதி பாடசாலை, சங்கானை, தொட்டிலடி, பண்டத்தரிப்பு ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** சாளம்பைக்குளம் ஒரு பகுதி, துட்டுவாகை ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** சீனத்துறைமுகம், வங்காலை ஒருபகுதி, முள்ளிப்பழம், தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக்தொலைத் தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும்.




## ஆதிபராசக்தியின் பத்து தோற்றங்களும் பெயர்களும்

**மாதங்கி:** என்றும் உயர்நிலையில் இருப்பவள். அனைத்து கேடுகளையும் தனதாக்கி நன்மையை பிறருக்கு அருள்பவள்.

**புவனேஸ்வரி:** மென்மையான இதழ் உடையவள். பூமியை காப்பாற்றும் நாயகி. மனதில் ஏற்படும் எண்ணங்களுக்கு காரணமானவள். அழகும், சுந்தர வதனமும் நிறைந்தவள்.

**பகுளாமுகி:** பயங்கர ஆயுதங்களை தாங்கியவள். முட்கள் நிறைந்த கதாயுதம் இவளின் பிரதான ஆயுதம். எதிர்பாராத நிலையில் அசுரர்களை கதாயுதத்தால் தாக்குபவள். வேகமான பயணத்தால் எதிரிகளின் குழப்பத்திற்கு காரணமானவள்.

**திரிபுரசுந்தரி:** பதினாறு வயது கன்னிகையின் உருவை கொண்டவள். புதிய சிந்தனை மற்றும் புதிய கோட்பாடுகளின் மொத்த உருவம் என்றும் பிறருக்கு நுட்பமான ஞானத்தை வழங்கியவள் . சிவனின் உடலில் அமர்ந்து தியானிக்கும் உருவம் இவளுடையது.

**தாரா:** நட்சத்திரத்தை போல ஒளி வீசுபவள். தனது மஹா சக்தியை உள்ளே வைத்து எளிமையாக காட்சியளிப்பவள்.

# நிதி நிறுவனங்களின் வீழ்ச்சிக்கு மத்திய வங்கியே பொறுப்பேற்க வேண்டும்

## பிரதமர் மகிந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**மத்திய வங்கியின் கீழ் இயங்கும் நிதி நிறுவனங்களின் வீழ்ச்சிக்கு மத்திய வங்கியே பொறுப்பேற்க வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.**

மத்திய வங்கியின் கீழ் இயங்கும் த பினான்ஸ் நிறுவனத்தின் வீழ்ச்சி உள்ளிட்ட நிதி நிறுவனங்களின் வீழ்ச்சி தொடர்பான கலந்துரையாடல் பிரதமர் தலைமையில் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய வங்கியின் கீழ் உள்ள நிதி நிறுவனங்கள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைவதாகவும் அவ்வாறான நிதி நிறுவனங்களில் காணப்படும் முறை கேடுகளினால் அரசாங்கம் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் நிதி நிறுவனங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் உள்ள நம்பிக்கை குறைவடைந்துள்ளதாக தெரிவித்த பிரதமர், எனவே இது தொடர்பில் புதிய சட்டம் ஒன்றை இயற்றியாவது அல்லது நிதி நிறுவனங்களில் ஏற்படும் ஊழல்கள் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் எனத் தெரிவித்தார்.

மேலும், பண வைப்பாளர்களுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவுகள் கால தாமதம் இன்றி உரிய நேரத்தில் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும் என மத்திய வங்கி அதிகாரிகளுக்கு பிரதமர் கட்டளையிட்டார்.

கடந்த 22ஆம் திகதி த பினான்ஸ் நிறுவனத்தின் உறுப்புரிமை மத்திய வங்கியினால் இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில், குறித்த நிறுவனத்தில் வைப்புச் செய்திருந்த வாடிக்கையாளர்களின் 97 வீதமானவர்களுக்கு கொடுப்பனவுகள் மீள வழங்கப்படும் என மத்திய வங்கி ஆளுநர் எச்.ஏ.கருணாரத்ன இதன் போது பிரதமருக்கு உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஊரடங்கு காலப்பகுதியில் இணைய குற்றங்கள் வெகுவாக அதிகரிப்பு

## பொது மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு காலப்பகுதியில் நாடு முழுவதும் 3ஆயிரத்து 900ற்கு மேற்பட்ட இணையக் குற்றங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை கணனி அவசர நடவடிக்கை பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி இறுதி 9 வாரங்களிலேயே இந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளது.

இது மிகவும் கடுமையான சூழ்நிலை என இலங்கை கணனி அவசர நடவடிக்கை பிரிவின் தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரவிந்து மீகாஸ்முல்ல கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா தொற்று வேகமாகப் பரவி வரும் நிலையில்,இணைய மோசடி, தனியுரிமை மீறல்கள், சமூக ஊடகம் தொடர்பான சம்பவங்கள் மற் றும் ஹக்கிங் தொடர்பான முறைப்பாடுகள் இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித் தார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையினைக் குற்றவாளிகள் சாதகமாக பயன்படுத்திக்கொண்டுள்ளனர் என்பது புலப்படுகின்றது எனவும் அவர் இதன்போது சுட்டிக் காட்டினார். (ஜ-4)

# மீண்டும் நாட்டில் எலிக்காய்ச்சல்

(கொழும்பு)

நாட்டில் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 2 ஆயிரத்து 369 பேர் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், மே மாதத்தில் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டது. இதன் அடிப்படையில், ஜனவரி மாதத்தில் 665 பேரும், பெப்ரவரி மாதத்தில் 454 பேரும், மார்ச் மாதத்தில் 206 பேரும், ஏப்ரல் மாதத்தில் 132 பேரும் மே மாதத்தில் 912 பேரும், எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், மாவட்ட ரீதியான தரவுகளின் அடிப்படையில், இந்த ஆண்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் அதிகளவிலானோர் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன்படி, இரத்தினபுரி மாவட்டத்தில் 624 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 273 பேரும், காலி மாவட்டத்தில் 201 பேரும் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் எலிக்காய்ச்சலினால் 10 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், எலிக்காய்ச்சலினால் கடந்த வருடத்தில் 6 ஆயிரத்து 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இரத்தினபுரி மாவட்டத்தில் ஆயிரத்து 245 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 677 பேரும் அதிகளவில் பாதிக்கப்பட்டனர். (ஜ-8)

# இடுகம கொவிட் -19 சமூக பாதுகாப்பு நிதிய மீதி ஆயிரத்து 243 மில்லியனாக அதிகரிப்பு



(கொழும்பு)

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் இடுகம கொவிட் -19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஆயிரத்து 243 மில்லியனாக அதிகரித்துள்ளது.

**Sri Ramco Roofing Lanka (Pvt) Ltd** நிறுவனம் 2 மில்லியன் ரூபாவையும், **Sri Ram co Lanka (Pvt) Ltd** நிறுவனம் 2 மில்லியன் ரூபாவையும், **Siam City Cement (Lanka) Ltd** நிறுவனம் 5 மில்லியன் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளன. அதற்கான காசோலைகள் நேற்று முன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டன.

உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் 5 இலட்சத்து 22 ஆயிரத்து 231.19 ரூபாவை யும், Union Chemicals Lanka PLC நிறுவனம் 500,000 ரூபாவையும், விசேட வைத்திய நிபுணர் திருமதி டீ.ஏ விஜேசுந்தர ஒரு இலட்சம் ரூபாவையும் அபான்ஸ் நிறுவனத்தின் தலைவர் ருசீ பெஸ்டொன்ஜி ஒரு மில்லியன் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

இடுகம இணையத்தளத்தின் ஊடாகக் கிடைத்துள்ள தொகை 17 இலட்சத்து 86 ஆயிரத்து 50 ரூபாவாகும். தற்போது இடுகம கொவிட்- 19 சுகாதார, பாதுகாப்பு நிதியத்தின் மீதி ஆயிரத்து 243 மில்லியன் ரூபாவாகும். (ஜ-4)

# தபால்மூல வாக்களிப்பிற்கான விண்ணப்ப முடிவுத்திகதி நீடிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் திகதி மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை தபால்மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை ஏற்கும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இம்முறை சுகாதார ஊழியர்களும் தபால்மூல வாக்களிப்பிற்கு விண்ணப்பிக்க முடியும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை வாக்களிப்பு நிலையங்களும் ஒரு சுகாதார ஊழியர் வீதம் சேவையில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் அறிவித்துள்ளது. (ஜ-8)

# உலக சூழல் தினம் இன்று

ஜூன் -5 இன்று உலக சூழல் தினம் அகிலரீதியில் அனுஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவ்வருடத்திற்கான உலக சூழல் தினத்தின் தொனிப்பொருளாக இயற்கைக்கான நேரம் (Time for Nature) என்பது அறிவிக்கப்பட்டிருக்கின்றது. பண்டைய தமிழ் இலக்கியம் புறநானூறு கூறுவது போல மக்களின் வாழ்வும் தாழ்வும் ஐம்பூதமான இயற்கையை மையமாக வைத்தே அமைந்துள்ளமையால் மனிதனுக்கு மட்டுமல்ல ஏனைய உயிரினங்களுக்கும் அவை வாழும் சூழலே அவற்றின் நிலவுகையை தீர்மானிக்கின்றன. அத்தகைய சூழலிற்கு மனித நடவடிக்கைகளால் ஏற்பட்டு வரும் விரும்பத்தகாத மாற்றங்களும் அதனால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளும் உலகின் அழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதை உணர்ந்து கொண்டு அகிலம் விழித்துக் கொண்டதன் விளைவே ஐ.நா. சுற்றாடல் அமைப்பினால் 1972 ஆம் ஆண்டில் சுவீடனில் ஸ்ரொக்ஹோம் நகரில் நடைபெற்ற சுற்றாடல் மாநாட்டில் ஜூன்-5 சர்வதேச சுற்றாடல் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இதன் நோக்கமாக சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உலகளாவிய ரீதியில் உணரச் செய்து அரசியல் மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கத் தூண்டுவதாகும்.

சூழல் என்பது உயிரினங்களையும் அவை வாழும் சூழலிலுள்ள உயிரற்ற பகுதிகளையும் அதாவது சுற்று, நீர், நிலம் கனிப்பொருட்களையும் உள்ளடக்கிய இயற்கை அமைப்பாகும். சூழலைப் பற்றிப் பேசுகையில் சூழல் மாசடைதல் என்ற விடயத்தைப் பற்றிப் பேசுவதும் இன்றைய காலகட்டத்தில் தவிர்க்க முடியாததாகியுள்ளது. இன்று உலகை அச்சுறுத்தும் முக்கிய பத்து பிரச்சினைகளுள் சூழல் மாசடைதலும் ஒன்றாகியுள்ளது. சூழல் மாசடைதல் என்பது இரசாயனப் பொருட்கள், வெப்பம், ஒளி, ஒலி, கதிர்வீச்சு போன்றவற்றால் சூழலின் இயற்கைத் தன்மை குழப்பமடைதல் ஆகும். அதாவது சூழலின் கூறுகளான உயிருள்ளவைகள் காற்று, நீர், மண் போன்றவற்றில் ஏற்படுத்தப்படும் விரும்பத்தகாத விளைவுகளாகும்.

காற்று மாசடைதலைக் கருதும் போது இன்று உலகின்93% ஆன மக்கள் காற்று மாசுபட்டுள்ள சுற்றுப் புறங்களில் வசிக்கின்றனர். உலகில் ஆண்டுக்கு 70 இலட்சம் பேர் காற்று மாசாக்கத்தின் பாதிப்பினால் இறக்கின்றனர். மாசடைந்த காற்றில் சல்பர்டை ஒக்சைட்டு, காபன் மொனொக்சைட்டு, நைதரசன் டைரொக்சைகட்டு, காரியம் போன்ற நச்சுவாயுக்களும் பொருட்களும் கலந்திருக்கின்றன. இதன் விளைவாக இரத்தக் குழாய் சேதம், பக்கவாதப் பிரச்சினைகள், நுரையீரல் சார்ந்த நோய்கள் என்பன ஏற்படுகின்றன. காற்று மாசாக்கத்தை தூண்டும் காரணிகளாக சுவட்டு எரிபொருட்களின் தகனம், குப்பைக் குவியல்களிலிருந்து வெளிவரும் வாயுக்கள், அதிகரித்த பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனை, காடழிப்பு, போக்குவரத்து, அதிகரிப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நீர் மாசடைதல் என்பது தொழிற்சாலைகள், விவசாய நிலங்கள், பண்ணைகள், நகர்ப்புறக் குடியிருப்புக்கள் போன்றவற்றில் இருந்து வரும் கழிவுகள் நீர் நிலைகளில் கலப்பதனால் நீரின் தரமும் நீர் வாழ் உயிரினங்களும் பாதிக்கப்பட்டு அந்நீர் பயன்படுத்த முடியாத நிலையை அடைதல் ஆகும். உலகளாவிய ரீதியில் பாதுகாப்பான குடிநீர் இன்றி 8 செக்கனுக்கு ஒரு குழந்தை இறந்து கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள் குழந்தைகளில் வளர்ச்சிக் குறைபாடு, பிறப்பு கோளாறுகள், புற்றுநோய், வயிற்றுப் போக்கு, எண்ணெய் கசிவுகளான தோல் எரிச்சல், அரிப்பு மற்றும் மண் செழிப்பற்றுப் போக உணவு வலையில் பாதிப்பு என்பன ஏற்படுகின்றன. இவற்றுக்கான காரணிகளாக அதீத இரசாயன உரப் பயன்பாடு, தொழிற்சாலைகளின் சரியான நீர்ப் பரிகரிப்பு முறைகள் பின்பற்றப்படாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.



மண் மாசடைதலும் நீர் மாசடைதலைப் போலவே முறையற்ற விவசாய நடவடிக்கைகள் மற்றும் அதிக உரப்பாவனை, பிளாஸ்ரிக், பொலித்தீன் போன்ற பொருட்களை மண்ணினுள் புதைத்தல் அல்லது மண்ணுக்கு விடு வித்தல் போன்றவற்றால் ஏற்படுகின்றது. இதன் விளைவுகள் மனிதனுக்கு நோயாகவும் ஏனைய மண்ணில் வாழும் உயிரினங்கள் அழிந்து போவதற்கு காரணமாகவும் மண் தரிசாகி எதிர்காலத்தில் விவசாயம் பாதிக்கப்படுவதற்குக் காரணமாகவும் அமைகின்றன. பொதுவாக சூழல் மாசடைதலை நோக்குமிடத்து மாசுபடுத்தும் விடயங்களாக காடழிப்பு, எரிபொருள் பாவனை, பிளாஸ்ரிக் பொலித்தீன் என்பற்றில் அதிக பாவனை, முறையற்ற விவசாய மற்றும் தொழிற்சாலை நடவடிக்கைகள் என காரணிகள் நீண்டு செல்கின்றன. எது எப்படியோ அனைத்து அம்சங்களிலும் மனிதர்களின் பங்கு பொதுவானதாக அறியத்தருகின்றது.

எனவே சுற்றுச்சூழலின் நிலவுகையை தக்க வைப்பதற்கு சுற்றுச் சூழல் பாதுகாப்பு இன்றியமையாததாக அமைகின்றது. சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்பது தனிமனிதனோ / அமைப்போ / அரசாங்கமோ இயற்கைச்சூழல் பாழாகாமல் பாதுகாக்கும் செயல் ஆகும். சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வழிமுறைகளாக சுற்றுச்சூழலுடன் தொடர்புடைய சட்டங்களை அமுல்படுத்தல், சுற்றுச்சூழல் கல்வி முறைகளை அறிமுகம் செய்தல், விழிப்புணர்வு நடவடிக்கைகள், மர நடுகைகளை அதிகரித்தல், எரிபொருள் பாவனைக் குறைப்பு, பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனைக் குறைப்பு, முறைப்படுத்தப்பட்ட தொழிற்சாலை மற்றும் விவசாய நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்களாக மத்திய சுற்றாடல் அதிகார சபை, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, மகாவலி அதிகார சபை வனப்பாதுகாப்பு திணைக்களம், கடல் மாசுறல் தடுப்பு அதிகார சபை, அரச மரத்தளபாட கூட்டுத்தாபனம், கைத்தொழிற்றுறை தொழில்நுட்ப நிறுவனம் போன்றவை உள்ளன.

இந்நிறுவனங்களின் முக்கிய பணிகளாக இயற்கை வளப் பாதுகாப்பு கழிவுப் பொருட்களை அகற்றுதல் மற்றும் முகாமைத்துவம், தேசிய சுற்றாடல் கொள்கைகளை சர்வதேச சூழல் ஒப்பந்தங்களுடன் ஒருங்கிணைத்தல், இயற்கையைப் பாதுகாக்க இளம் பரம்பரைக்கு விழிப்புணர்வு ஊட்டல், தடுப்புச்சட்டம் இயற்றல் என்பன அமைகின்றன.

இத்தனை பணிகளையும் செய்வதற்கு இவர்கள் இருக்கும் போது நமக்கு என்ன வேலை என்று பொறுப்பற்றவர்களாக இருந்து விட முடியாது. இதனால் தான் மாசுபடுத்துவதும் நாமே மருத்துவமனை வாசலில் நிற்பதும் நாமே என்ற நிலை உருவாகி இருக்கின்றது. இன்று சுனாமி, புவிவெப்பமடைதல், ஓசோன் படல ஓட்டை, பருவமழை பொய்த்தல், அமிலமழை, பாலைவனமாதல் உயிர்ப் பல்வகைமை அழிதல் போன்ற உலகளாவிய பிரச்சினைகளுக்கு ஒவ்வொரு தனி மனிதனும் பொறுப்புச் சொல்ல வேண்டியவனாக உள்ளன. ஆதாரமாக அண்மையில் அமேசன் காடு எரிந்து போனதற்கும் ஒரு தனி வர்த்தகரே காரணமாக இருந்துள்ளார். சூழலை வளர முறையின்றி அழித்து நம் தலைமுறைகள் அதன் சாபத்தை அனுபவிக்க நாம் காரணமாயிருக்கக்கூடாது.

இன்று கொரோனா நோய்த்தொற்று மனிதப்பேரழிவை அரங்கேற்றிக் கொண்டிருந்தாலும் சூழலைப் பொறுத்தவரை இயற்கை தன்னைப் புதுப்பிக்கும் காலமாக இந்நோய் தொற்றுக்காலம் அமைந்திருக்கின்றது. இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கை சுத்தமானதாக தேசிய கட்டட நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் நம் சூழலைப் பாதுகாக்க இவ்வாறானதொரு நோய்த்தொற்றுத் தான் வேண்டும் என்ற நிலை வேதனைக்குரியது.

நம் முன்னோர்களைப் போல சுற்றுச் சூழல் பாதுகாப்பு நம் முதன்மை கடமையாக கொள்ள வேண்டும். எம் மூதாதையர்கள் மூன்று கார் வைத்திருக்கவில்லை, நுகர்வுக் கலாசாரத்தின் அடிமைகளாக இருக்கவில்லை. இயந்திரங்களுக்குப் பதில் அவர்களின் கால் நடைகளும் கால்களுமே வேலை செய்தன. காரணம் அவர்களின் காதல் சூழல் மீது இருந்தது. இப்பூமியில் அத்தனை உயிர்களும் நித்தமும் நிலையாக வாழ இத்தினம் உறுதி பூணுவோம், சொத்தாக பேணுவோம் நம் சூழல்தனை என்று எம் சித்தத்தில் பதித்து.

திருமதி.அன்ரனி டினேஷ்
{B.Sc,M.Sc(Pera)}

## மூன்று முக்கிய தொழில் துறைகளில்
### சீனா-இலங்கை ஒன்றிணைதல் தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

அண்மைக்காலங்களில் நாட்டின் பல்வேறு தொழிற் துறைகளின் தலைவர்களுடனும் சந்திப்பை நிகழ்த்திவரும் சீனத் தூதரக அதிகாரிகள், அந் தந்தத் துறைகளில் இருநாடுகளும் ஒன்றிணைந்து செயற்படக்கூடிய வழிவகைகள் குறித்தும் ஆராய்ந்து வருகின்றனர்.

அதன்படி, நாட்டிலுள்ள சீனத்தூதரக விவகாரங்களுக்குப் பொறுப்பான ஹூவே கடந்த செவ்வாய்கிழமை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஸ்மன், இலங்கை மின்சார சபையின் தலைவர் விஜித ஹேரத் மற்றும் இலங்கை தேயிலைச் சபையின் தலைவர் ஜயம்பதி மொலிகொட ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் போது ஏற்கனவே சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங் உடன்பட்டிருந்த நிதி, சக்தி வலு மற்றும் தேயிலை உற்பத்தித்துறைகளில் ஒன்றிணைந்து பணியாற்றுவது குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

அதேபோன்று நேற்று முன்தினம் புதன்கிழமை உயர் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தனவை சந்தித்த ஹூவே, பல்கலைக்கழகங்களுக்கு இடையில் பரஸ்பர ஒத்துழைப்பை உருவாக்குதல், தகவல் தொழில்நுட்பத்துறை, தொழிற்பயிற்சி மற்றும் தொலைதூரக்கல்வி ஆகிய பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

அத்தோடு இலங்கையிலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களினதும் பயன்பாட்டிற்கென சீனத்தூதரகத்தினால் 50,000 முகக்கவசங்களும் நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டன. (ஜ-4)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை கொழும்பில் முன்னெடுப்பு

(கொழும்பு)

நேற்று முதல் தொடர்ந்து 4 நாட்களுக்கு கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாநகர சபை, சுகாதாரத் திணைக்களம் மற்றும் இலங்கை பொலிஸ் ஆகியன ஒன்றிணைந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

குறித்த நடவடிக்கையூடாக, கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட பகுதிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் சூழலை வைத்திருக்கும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கொழும்பு மாநகர சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் மாத்திரம் 19 ஆயிரத்திற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், 22 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# சுதந்திரத்திற்குப் பின் இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

10

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



| பாராளுமன்றத் தேர்தல் 1965 | | | | |
|---|---|---|---|---|
| | வேட்பாளர்கள் | | | |
| A-போட்டியிட்டோர்<br>B- தெரிவு செய்யப்பட்டோர்<br>C- போடப்பட்டமொத்த வாக்குகள் | A | B | C | % |
| ஐக்கிய தேசிய கட்சி | 116 | 66 | 1,590,929 | 39.31% |
| சிறீலங்கா சுதந்திரக்கட்சி | 101 | 41 | 1,221,437 | 30.18% |
| இலங்கைத் தமிழரசுக்கட்சி | 20 | 14 | 217,914 | 5.38% |
| லங்கா சமசமாஜகட்சி | 25 | 10 | 302,095 | 7.47% |
| சிறீலங்கா சுதந்திர சோசலிசக்கட்சி | 32 | 5 | 130,429 | 3.22% |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 9 | 4 | 109,754 | 2.71% |
| அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | 15 | 3 | 98,746 | 2.44% |
| மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி | 61 | 1 | 96,665 | 2.39% |
| தேசிய விடுதலை முன்னணி | 10 | 1 | 18,791 | 0.46% |
| சுயேட்சை | 106 | 6 | 259,960 | 6.42% |
| மொத்தம் | 495 | 151 | 4,046,720 | |

| பாராளுமன்றத் தேர்தல் 1970 | | | | |
|---|---|---|---|---|
| | வேட்பாளர்கள் | | | |
| A-போட்டியிட்டோர்<br>B- தெரிவு செய்யப்பட்டோர்<br>C- போடப்பட்டமொத்த வாக்குகள் | A | B | C | % |
| சிறீலங்கா சுதந்திரக்கட்சி | 108 | 91 | 1,839,979 | 36.86% |
| லங்கா சமசமாஜகட்சி | 23 | 19 | 433,224 | 8.68% |
| ஐக்கிய தேசிய கட்சி | 130 | 17 | 1,892,525 | 37.91% |
| இலங்கைத் தமிழரசுக்கட்சி | 19 | 13 | 245,727 | 4.92% |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 9 | 6 | 169,199 | 3.39% |
| அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | 12 | 3 | 115,567 | 2.32% |
| மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி | 4 | 0 | 46,571 | 0.93% |
| சுயேட்சை | 136 | 2 | 249,006 | 4.99% |
| மொத்தம் | 441 | 151 | 4,991,798 | |

அதேவேளையில், போர் நிறுத்த உடன்பாட்டின் மூலம் தாம் நாட்டில் பொருளாதார மேம்பாட்டைக் கொண்டு வந்திருப்பதாகவும், ஈழப் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை எட்டவே தாம் விரும்புவதாகவும் ரணில் விக்கிரமசிங்க பரப்புரை நிகழ்த்தினார். இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க பாராளுமன்றத்தை கலைத்து புதிய தேர்தலுக்கு அழைப்பு விடுத்தார்.

**இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2004**

2004 இலங்கை பாராளுமன்றத் தேர்தல் இலங்கையின் 13ஆவது பாராளுமன்றத்திற்கு 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 2004, ஏப்ரல் 4 இல் இடம்பெற்றது. 12ஆவது பாராளுமன்றத் தேர்தல் இடம்பெற்று மூன்றாண்டுகளுக்குள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அதனைக் கலைத்து புதிய தேர்தலுக்கான அறிவித்தலை விடுத்தார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் மக்கள் விடுதலை முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தேச விமுக்தி ஜனதா கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, முஸ்லிம் தேசிய ஐக்கியக் கூட்டமைப்பு, இலங்கை மக்கள் கட்சி கூட்டுச் சேர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (UPFA) என்ற கூட்டணியை அமைத்தது.

2001 தேர்தலில், மக்கள் கூட்டணியும் மக்கள் விடுதலை முன்னணியும் வெவ்வேறாகப் போட்டியிட்டன. அப்போது ம.வி.மு. **9.1%** வாக்குகளைப் பெற்று 16 இடங்களைக் கைப்பற்றியிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி சிறிய கட்சிகளான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற சிறிய கட்சிகளுடன் இணைந்து ஐக்கிய தேசிய முன்னணி (ஐ.தே.மு.) என்ற கூட்டணியில் போட்டியிட்டது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரில் தமிழ் அரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டது.

225 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு 82 இடங்களை மட்டும் கைப்பற்றி தேர்தலில் தோற்றது. எதிர்க்கட்சிக் கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 105 இடங்களை வென்றது. அறுதிப் பெரும்பான்மைக்கு எட்டு இடங்கள் போதாமல் இருந்தும் அது ஆட்சியமைத்தது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்னாள் தொழிலமைச்சர் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக அறிவித்தார். ஐ தே.முவைச் சார்ந்த எதிர்க்கட்சி வேட்பாளரான டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி வேட்பாளரான டி. யூ. டபிள்யூ. குணசேகர பெற்ற 109 வாக்குகளுக்கெதிரான 110 வாக்குகளைப் பெற்று சபாநாயகர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

பௌத்த சிங்கள தேசியவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (த.தே.கூ.), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) போன்றவையும் தேர்தலில் பாராளுமன்ற இருக்கைகளைப் பெற்றன. இவற்றை விட பல சிறிய கட்சிகளும் (10) தேர்தலில் போட்டியிட்டன. அவையாவன, தேசிய மக்கள் கட்சி, சிங்கள மகாசம்மத பூமிபுத்ர கட்சி, சுவராச்சிய, இலங்கை முற்போக்கு முன்னணி, ருகுணை மக்கள் கட்சி, இலங்கை தேசிய முன்னணி, லிபரல் கட்சி, இலங்கை முஸ்லிம் கட்சி, சோசலிச சமத்துவக் கட்சி, சனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகும். இவ் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து மொத்தமாகப் பெற்ற வாக்குகள் 7069 **(0.08%)** ஆகும்.

**2004ஆம் ஆண்டுத் தேர்தலின் பின் நடந்தவை**

கடைசியாக இலங்கை பாராளுமன்றத்துக்காக 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 இல் இடம்பெற்றது. மொத்தம் 225 தொகுதிகளில் புதிதாக உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (UPFA) 105 இடங்களைக் கைப்பற்றி அதிக இடங்களைக் கைப்பற்றிய கட்சியானது. ஆட்சியமைப்பதற்குப் பெரும்பான்மையில்லாத நிலையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஒரேயொரு உறுப்பினருடன் இணைந்து சிறுபான்மை அரசை நிறுவியது.

2004, ஏப்ரல் 6 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக அறிவித்தார். அமைச்சரவையின் ஏனைய உறுப்பினர்கள் ஏப்ரல் 10 இல் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். 2004 ஏப்ரல் 22 இல் புதிய பாராளுமன்றம் கூடியது. அன்றிலிருந்து எதிரணியில் இருந்து கட்சி தாவி ஆளும் கூட்டணியில் இணைந்து கொண்டோருடன் சேர்த்து ஆளும் கூட்டணியின் பலம் 129 இற்கு அதிகரித்தது. இவர்களில் பலருக்கு அமைச்சரவையில் இடம் கொடுக்கப்பட்டது: 9 ஓகஸ்ட் 2004: இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மூவர் இணைந்தனர். 3 செப்டெம்பர் 2004: இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி எட்டு உறுப்பினர்களுடன் ஆளும் கூட்டணியில் இணைய, அரசாங்கத்துக்கு பெரும்பான்மை கிடைத்தது. 16 ஜூன் 2005: ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தனது 39 உறுப்பினர்களுடன் அரசில் இருந்து விலகியது. 25 ஜனவரி 2006: ஐக்கிய தேசியக் கட்சியின் நான்கு உறுப்பினர்கள் அரசுடன் இணைந்தனர். 28 ஜனவரி 2007: ஐதேகவின் 18 உறுப்பினர்களும், முஸ்லிம் காங்கிரஸின் 6 பேரும் அரசுடன் இணைந்தனர். 12 டிசெம்பர் 2007: முஸ்லிம் காங்கிரஸின் நான்கு உறுப்பினர்கள் அரசில் இருந்து விலகினர். 28 டிசெம்பர் 2008: மே 2008 இல் ஜே.வி.பியில் இருந்து விலகி தேசிய விடுதலை முன்னணி என்ற கட்சியை அமைத்த 12 உறுப்பினர்கள் அரசுடன் இணைந்தனர்.

**இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2010**

2010 இலங்கை பாராளுமன்றத் தேர்தல் இலங்கையின் 14ஆவது பாராளுமன்றத்திற்கு 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 2010, ஏப்ரல் 8 இல் இடம்பெற்றது. 2010 பெப்ரவரி 10 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 13ஆவது பாராளுமன்றத்தைக் கலைத்தார். வேட்பு மனுக்கள் பெப்ரவரி 19 இலிருந்து பெப்ரவரி 26 வரை ஏற்றுக்கொள்ளப்பட்டன. 14,088,500 இலங்கையர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். 30 ஆண்டுகள் நீடித்த ஈழப் போர் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற முதலாவது பொதுத்தேர்தல் இதுவாகும். இத்தேர்தலில் முக்கிய கட்சிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி, முக்கிய எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி, இலங்கை தமிழரசுக் கட்சி, மற்றும் ஜனநாயகத் தேசியக் கூட்டணி ஆகியவையாகும். (தொடரும்)

## அமைச்சர் டக்ளஸின் கோரிக்கை ஏற்கப்பட்டது

# வவுனியா மாவட்ட பொருளாதார மத்திய நிலையத்தில் வர்த்தக நடவடிக்கைகளுக்கு அமைச்சரவை அனுமதி

**(கொழும்பு)**

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் முன்வைத்த கோரிக்கையை ஏற்று வவுனியா மாவட்ட பொருளாதார மத்திய நிலையத்தில் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**



வவுனியா மாவட்டத்திற்கான பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதற்காக கடந்த 2016 ஆம் ஆண்டு கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் 291 மில்லியன் நிதியை ஒதுக்கி அன்றைய அமைச்சரவை அனுமதி அளித்தது.

ஆனாலும் அதன் அமைவிடம் தொடர்பில் அன்றைய வவுனியா மாவட்ட அரசியல் தரப்பினரிடையே காணப்பட்ட இழுபறி நிலை காரணமாக குறித்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்ட போதும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு வழங்கப்படவில்லை.

இந்நிலையில் பொருளாதார மத்திய நிலையத்தை திறப்பதற்கான அனுமதியை வழங்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு குறித்த மாவட்ட வர்த்தகர்களும் பொதுநலன்விரும்பிகளும் கொண்டுசென்றிருந்த நிலையில் நேற்று முன்தினம் அமைச்சரவையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறித்த விடயத்தை கோரிக்கையாக முன்வைத்திருந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை வவுனியா மாவட்ட பொருளாதார மத்திய நிலையத்தை திறப்பதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

---

# வடமாகாணத்தில் பாடசாலைகளை மீள ஆரம்பித்தலுக்கான முன்மொழிவுகளும் ஆயத்தங்களும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பாடசாலைகளை மீள ஆரம்பித்தலுக்காக மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் வட மாகாண கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அலுவலர்களுடன் கடந்த மாதம் 21 ஆம் திகதி நடத்திய கலந்துரையாடலுக்கு இணங்க வட மாகாணத்தில் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்குரிய யோசனைகள் முன்வைக்கப்பட்டு அதற்கான தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வரு கின்றதாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இதனடிப்படையில் அரசினால் அறிவிக்கப்படும் திகதியில் இருந்து பின்வரும் கட்டங்களாக கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

முதலாம் கட்டம் - பாடசாலைகளைத் தயார்ப்படுத்தலும் துப்புரவு செய்தலும் (01 வாரம்)

அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருகை தந்து பாடசாலைச் சமூகத்தினரின் பங்கேற்புடன் கைகழுவும் நிலையம், நீர் வசதிகளை ஏற்படுத்தல், டெங்கு கட்டுப்பாடு தொடர்பாக துப்புரவு பணிகள், சிரமதானம் மேற்கொள்ளல். அத்துடன் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுடன் புதிய நேர சூசிகள் தயாரிப்பு, பாடங்களை நடத்துதல் தொடர்பாக ஆசிரியர்களுடன் ஒழுங்கமைப்புக் களை மேற்கொள்ளல், சமூக இடைவெளியைப் பேணக்கூடியவாறு ஒரு வகுப்பில் 20 மாணவர்கள் இருக்கத்தக்கவாறு ஏற்பாடு செய்தலும் அதிக எண்ணிக்கையில் மாணவர்களைக் கொண்ட வகுப்புக்களைப் பிரித்து இருவேளை பாடசாலைகளை நடத்துவது தொடர்பில் திட்டமிடலை மேற்கொள்ளலும்.

இரண்டாம் கட்டம் - தரம் 10, 11, 12, 13 வகுப்புக்களை ஆரம்பித்தல் (02 வாரங்கள்)

தரம் 10, 11, 12, 13 வகுப்புக்களை ஆரம்பித்தலும் நாளொன்றுக்கு தரம் 10, 11 இற்கு மூன்று மணித்தியாலங்களும் தரம் 12, 13 இற்கு 4.30 மணித்தியாலங்களும் பாடங்கள் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்டம் - தரம் 5, 6, 7, 8, 9 என்பவற்றை ஆரம்பித்தல் (01 வாரம்)

தரம் 5, 6, 7, 8, 9 வகுப்புக்களை ஆரம்பித்து தரம் 5 இற்கு நாளொன்றுக்கு மூன்று மணித்தியாலங்களும் தரம் 6 தொடக்கம் 11 வரை 4 மணித்தியாலங்களும் தரம் 12, 13 இற்கு 4.30 மணித்தியாலங்களும் பாடசாலைகளை நடத்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

நான்காம் கட்டம் - நிலைமைகளை அனுசரித்து பாடசாலையின் சகல நடவடிக்கைகளையும் வழமையான நிலைக்குக் கொண்டுவருதல்.

தற்போதைய நிலைமைகளுக்கு ஏற்றவாறாகவும் கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமையவும் மாணவர் வரவு, ஆசிரியர் வரவு மற்றும் வழமையான நேரசூசி அமுலாக்கம் என்பவற்றை நியம நிலைக்குக் கொண்டு வருவதுடன் பாடசாலையின் சகல செயற்பாடுகளையும் அதன் பிரகாரம் தொடர்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் கை கழுவும் நிலையம் மற்றும் நீர் வசதிகளை ஏற்படுத்தும் ஒத்துழைப்புக்காக வட மாகாணத்தின் 35 கல்விக் கோட்டங்களிலும் தலா ஒவ்வொரு பாடசாலை வீதம் Sri Lanka Red Cross Society அமைப்பும் கிளிநொச்சி, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களின் மொத்தம் 75 பாடசாலைகளுக்கு Save the Children in Sri Lanka அமைப்பும் மற்றும் கிளிநொச்சியின் 12 பாடசாலைகளுக்கு கொய்கா (KOICA) செயற்றிட்டத்தின் கீழ் OFERR நிறுவனமும் முன்வந்துள்ளன.

COVID - 19 பரவல் நிலைமைகளை எதிர்கொள்வதற்கு மேற்குறிப்பிட்ட வசதிகள் பாடசாலைகளில் போதுமானவை அல்ல என்பதுடன் இவற்றை ஏற்படுத்துவதற்கு வழங்கப்படும் விசேட உதவிகளும் போதுமானவை அல்ல.

எனவே இது தொடர்பில் பாடசாலைகளில் சுகாதார பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், சமய நிறுவனங்கள் முதலான சகல சமூக நிறுவனங்களும் தமது பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

---

# மாவீரர்களை நினைவுகூருவதை வன்முறை மூலம் தடுக்க நினைக்கிறது அரசு

## சிறீதரன் சீற்றம்



(தர்மபுரம்)

மாவீரர்களின் நினைவுகூரலை வன்முறை மூலம் தடுக்க நினைக்கிறது அரசாங்கம் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தற்போது தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் வனவளத் திணைக்களத்தினால் எல்லையிட்டுள்ள துயிலும் இல்ல வளாகத்தினுள் இராணுவத்தினரால் மரக்கறிப்பயிர்ச்செய்கை செய்யப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நேற்று துயிலும் இல்லத்தை பார்வையிடச் சென்றார்.

தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தின் ஆக்கிரமிப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலை போராட்டத்தில் தங்கள் உயிர்களை தியாகம் செய்த மாவீரர்களின் வித்துடல்கள் இங்கு விதைக்கப்பட்டிருக்கின்றன. யுத்தம் நிறைவுற்று 2015 ஆம் ஆண்டிற்கு பின் இவ்விடத்தில் தங்கள் பிள்ளைகளை பெற்றோர் நினைவு கூர்ந்து வருகின்றனர்.

இக்காரணி தற்போது அரச காரணியாக இருக்கிறது. கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 101 ஆம் இலக்கத்தை உடைய இந்தப் பகுதி அரச காணியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரச காணியை வனவளத்திணைக்களம் தன்னுடையது என அடையாளப்படுத்துவதாக இருந்தால் கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் ஆகியோரின் அனுமதியுடன் அடையாளப்படுத்த வேண்டும்.

வனவளப் பிரிவினரால் எல்லைப்படுத்தப்பட்டால் அங்கு நிலைகொண்டிருக்கும் இராணுவமும் உடனடியாக வெளியேற வேண்டும். இதை விடுத்து இராணுவத்திற்கு இருக்க அனுமதி வழங்கி மக்கள் தங்கள் பிள்ளைகளை வணக்கம் செலுத்துவதை தடுக்கும் நோக்கில் அரசு செயற்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (2-5-316)

---

# முல்லை.பிராந்திய சுகாதார பணிப்பாளர் நியமனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய கலாநிதி த.வினோதன் நேற்று முன் தினம் பொறுப்பேற்றார்.

இவர் தற்போது மன்னார் மாவட்டத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியுடன் மேலதிகமாக முல்லைத்தீவு மாவட்டத்தையும் கடந்த 15 ஆம் திகதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்கவின் பணிப்பின் பேரில் பொறுப்பேற்றார். (2-5-9)

# மனைவியின் கழுத்தை திருகி கொலை செய்த கணவன்

(ஏறாவூர்)

மனைவியின் கழுத்தை கயிற்றால் திருகியதில் மனைவி உயிரிழந்துள்ள சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளதாகவும் கணவனை கைது செய்துள்ளதாகவும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் ஐயங்கேணி ஜின்னா வீதியைச் சேர்ந்த 24 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த இளம் குடும்பமான கணவன் - மனைவிக்கிடையே சம்பவதினமான நேற்று முன்தினம் பிற்பகல் சுமார் 3 மணியளவில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் மனைவியின் கழுத்தை கணவன் கயிற்றால் திருகிய தனால் மனைவி உயிரிழந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து 27 வயதுடைய கணவனை கைது செய்ததுடன் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் .

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# சிறைச்சாலைகள் பதில் ஆணையாளராக துஷார உபுல்தெனிய நியமனம்

(கொழும்பு)

**சிறைச்சாலைகள் பதில் ஆணையாளர் நாயகமாக அத்திணைக்களத்தின் ஆணையாளர்களில் ஒருவராக கடமையாற்றிய துஷார உபுல்தெனிய நியமிக்கப்பட்டுள்ளார்.**

இது தொடர்பில் நீதி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் அதன்படி புதிய பதில் சிறைச்சாலைகள் ஆணையாளராக துஷார உபுல்தெனியவை நியமித்துள்ளதாகவும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் செயலர் எஸ்.எம். மொஹம்மட் தெரிவித்தார்.



துஷார உபுல்தெனிய சிறைச்சாலைகள் அத்தியட்சராகவும், சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளராகவும் இதற்கு முன்னர் பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பொதுத் தேர்தலை நடத்துவதற்கான சுகாதார வழிகாட்டல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டன-சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

பொதுத் தேர்தலை நடத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தேவையான வழிகாட்டல்கள் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை சுகாதார அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள இந்த வழிகாட்டல் அறிவிப்பில் தபால்மூல வாக்களிப்பு இடம்பெற வேண்டிய முறை, இதற்கான சேவையில் எவ்வாறு அரச உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வது, தேர்தல் கூட்டங்களை நடத்த வேண்டிய வழிமுறை, பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முறை, தேர்தல் தினத்தன்று வாக்களிக்கும் முறை, வாக்குகளை எண்ணும் நடவடிக்கைகள் உள்ளிட்டவை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பில் நேற்று முன்தினம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தலைமையிலான சுகாதார அதிகாரிகள் குழு விசேட கலந்துரையாடலை முன்னெடுத்தது.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைய சுகாதாரப் பாதுகாப்புடனான தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் வெகு விரைவில் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# திங்கட்கிழமை முதல் 100 கண்காணிப்பாளர்கள்

(கொழும்பு)

தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக சுமார் 100 கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவால் தேர்தல் தினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர் மற்றுமொரு பகுதியினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என அதன் இணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார். (ஜ-4)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பிறர் மேல் பழி!

இந்த உலகத்திலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஆசை. ஒரு ராஜாவுக்கு ஒரு வினோத ஆசை. அது என்ன? என்றால் விதவிதமான விசிறி மட்டைகளை வாங்கி சேகரித்து வைக்க வேண்டும் என்பதே ஆகும். இப்படி எங்கே சென்றாலும் விசிறி மட்டைகளை வாங்கி வந்து சேர்த்து வைத்திருந்தார்.

ஒருநாள் தெருவழியாக ஒருத்தன் விசிறி மட்டைகளை விற்றுக் கொண்டு சென்றுகொண்டிருந்தான். இவர் அதை பார்த்து விட்டார் சும்மா இருப்பாரா? உடனே அந்த ஆளை அரண்மனைக்கு அழைத்து வரச் சொன்னார். விசிறி விற்பவனும் வந்தான்.

''உன்னிடம் விசேடமான விசிறி மட்டை ஏதாவது இருக்கிறதா...அப்படி இருந்தால் கொடு!'' என்றார்.

''அரசே என்னிடம் இருக்கும் விசிற மட்டை எல்லாமே மிகவும் விஷேசமானதுதான். பார்ப்பதற்கு மிகவும் சாதாரணமாகத்தான் தெரியும். இருந்தாலும் இதனுடைய தரம் மிகவும் உயர்வு. அதனாலே விசிறி மட்டையின் விலை 100 ரூபாய்!'' அப்படி என்றான் அந்த ஆள்.ராஜாவுக்கு ஆச்சரியம்.

''என்னப்பா இது பார்த்தால் பத்துகாசுகூட பெறாது போல இருக்கு... இதற்கு போய் 100ரூபாய் விலை சொல்கிறாயே அப்படி என்ன விஷேசம் இதிலே?'' என்றார்.

''மன்னா உங்களிடம் பொய் சொல்லி நான் ஏமாற்ற முடியுமா? எனக்கு ஏது அவ்வளவு தைரியம்? இந்த விசிறி மட்டையிலே உள்ள விஷேசம் என்னவென்றால் இது நூறுவருடம் உழைக்கும். அதற்கு நான் உத்தரவாதம் கொடுக்கிறேன்!'' என்றான்.

அப்படி என்றால் அந்த விசிறியை வாங்கு என்று சொன்னார். அரண்மனையிலே அதை 100ரூபாய் கொடுத்து வாங்கிவிட்டார்கள். இருந்தாலும் ராஜாவிற்கு மனதிற்குள்ளே ஒரு சந்தேகம். கொஞ்சம் யோசித்தார். அதன் பின் அந்த ஆளைப்பார்த்து இதோ பாரப்பா இன்றிலிருந்து இந்த விசிறி மட்டையை நான் உபயோகிக்கப் போகிறேன். நீ எதற்கும் ஒருவாரம் கழித்து என்னை வந்து பார்க்க வேண்டும்! என்றார். அவனும் சரி என்று ஒத்துக்கொண்டான்.

ராஜா அந்த விசிறி மட்டையை எடுத்து தினமும் விசிறிக் கொண்டு வந்தார். மூன்று நாளிலேயே அந்த விசிறி உடைய நடுக்குச்சி வெளியே வந்து விட்டது. அடுத்த மூன்று நாளிலேயே மிகுதியும் வீணாக போய் விட்டது.

''ஆஹா! ஏமாந்து போய் விட்டோமே அந்த ஆள் இனிமேல் அரண்மனைப்பக்கம் வரமாட்டான்!'' என்று நினைத்தார் ராஜா. ஆனால் அந்த நபர் சொன்னபடி சரியாக ஒருவாரத்திலே திரும்பி வந்தான். ராஜாவை பார்த்தான். அவர் மிகவும் கோபமாக இவரைப்பார்த்தார். என்னப்பா என்னிடமே விளையாடுகிறாயா?

''உன்னுடைய விசிறி மட்டை 100 வருடம் உழைக்குமென்று சொன்னாயே? ஒரு வாரத்துக்குள்ளேயே ஒன்றுமில்லாமல் போய் விட்டது? ராஜாவை ஏமாற்றினால் என்ன தண்டனை தெரியுமா?''என்றார்.

''அரசே! அப்படி நினைக்காதீர்கள். நான் ஒரு தப்பும் செய்யவில்லை. மன்னருக்கு விசிறி மட்டையை உபயோகிப்பது எப்படி என்று தெரியாது போல் இருக்கு! முறையாகவும் சரியாகவும் உபயோகப்படுத்தினால் இது 100 வருடம் கண்டிப்பாக உழைக்கும்!'' என்றான்.

''எனக்கென்ன விசிறவும் தெரியாது என்று சொல்கிறாயா?'' என்று கேட்டார் வேகமாக... ''தயவு செய்து நீங்கள் எப்படி விசிறினீர்கள் என்று சொல்லுங்கள்'' என்று கேட்டான் அவன். ''இப்படித்தான் விசிறிக் கொண்டேன்'' என்றார். எல்லோரும் விசிறுவது போல் விசிறி மட்டையை எடுத்து விசிறிக்காட்டினார் ராஜா. அந்த ஆள் பார்த்தான். ''சரிதான் இப்பொழுது எனக்கு புரிந்து விட்டது... என்ன தப்பு நடந்தது என்று! இந்த விசிறி மட்டையை உபயோகப் படுத்த வேண்டிய முறையே வேறு!'' என்றான்.

எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்று ஆர்வமாக கேட்டார் ராஜா. அந்த ஆள் அதை விளக்கமாக சொல்ல ஆரம்பித்தார்.

''விசிறி மட்டையை எடுத்து நம் முகத்துக்கு முன்னால் கையிலே அசையாமல் பிடிக்கவேண்டும்.நம்ம தலையை மட்டும் அப்படியும் இப்படியும் ஆட்டனும். விசிறி மட்டையை ஆட்டக்கூடாது! ''நீங்கள் விசிறியை ஆட்டியிருக்கிறீர்கள் அதுதான் அது வீணாகபோய் விட்டது. அதனாலே விசிறி மேல் தப்பு இல்லை... உங்கள் மேல் தான் தப்பு! ''என்றான்.

இன்றைக்கு உலகம் இப்படித்தான் போய்க்கொண்டிருக்கிறது. நாம் செய்யும் தப்பிற்கு அடுத்தவர்கள் மேல் பழியை போடுகிறோம். தவறுகளை நியாயப்படுத்த ஆரம்பிக்கின்றோம்.

இப்படித்தான் ஒருத்தன் புதிதாக ஒரு கார் வாங்கினான். ஓடுவதற்குக் கற்றுக் கொண்டான். ஒரு புளியமரத்திலே கொண்டு போய் மோதி விட்டான்.

''என்னடா இப்படி செய்து விட்டாயே?'' என்று கேட்க ''என்மேல் தப்பு இல்லை. நான் நேராகத்தான் வந்து கொண்டிருந்தேன்... எல்லோரும் விலகினார்கள். இந்த புளியமரம் மட்டும் விலகவில்லை. அதனாலேதான் இப்படி ஆகிவிட்டது! ''என்றான்.

# மெக்சிக்கோவில் வேகமெடுக்கும் கொரோனா ஒருநாளில் மட்டும் ஆயிரத்தை தாண்டிய பலி

(மெக்சிக்கோ சிட்டி)

மெக்சிகோவில் கொரோனா வைரஸால் நேற்று முன்தினம் மட்டும் 1092 பேர் பலியான நிலையில், மொத்த பலி எண்ணிக்கை 11 ஆயிரத்து எழுநூற்று இருபத்தொன்பதாக உயர்ந்துள்ளது.

உலகம்முழுவதும்கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 65 இலட்சத்தைக் கடந்துள்ளது. 3 இலட்சத்து 87 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். 31 இலட்சத்து 7 ஆயிரம் பேர் கொரோனாவில் இருந்து மீண்டுள்ளனர். கொரோனாவால் மிகவும்மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் மெக்சிக்கோ 14 ஆவது இடத்தில் உள்ளது. மெக்சிக்கோவில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை கடந்துள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் 1092 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளனர்.

ஒரே நாளில் பலி எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்திருப்பது இதுவே முதல் முறையாகும். (2-5)



# பிரேஸிலில் ஒருநாளில் மட்டும்

## ❖ஆயிரத்து 269 பேர் உயிரிழப்பு
## ❖27 ஆயிரத்து 312 பேர் பாதிப்பு

(ரியோடி ஜெனிரோ)

கொரோனா வைரஸ் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ள பிரேஸிலில், ஒருநாள் இறப்பில் அதிகபட்ச எண்ணிக்கை பதிவாகியுள்ளது.

இதன்படி, பிரேஸிலில் நேற்று முன்தினம் மட்டும் வைரஸ் தொற்றுக்கு 27,312 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 1,269 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய பிரேஸிலில் வைரஸ் தொற்று பரவியதிலிருந்து பதிவான அதிகபட்ச இறப்பு எண்ணிக்கை இதுவாகும்.



பிரேஸிலில் ஒட்டுமொத்தமாக 5 இலட்சத்து 83 ஆயிரத்து 980 பேர் வைரஸ் தொற்றுக்கு பாதிக்கப்பட்டுள்ளனர். 32 ஆயிரத்து 547 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 2 இலட்சத்து 85 ஆயிரத்து 301 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுவரை 2 இலட்சத்து 66 ஆயிரத்து 132 பேர் பூரண குணமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(2-5)

# வெடித்தது இரசாயன உலை எட்டுப் பேர் பரிதாபமாக பலி

(டில்லி)

குஜராத் மாநிலம் பாரூஜ் மாவட்டத்தில் இரசாயனத் தொழிற்சாலையின் உலை வெடித்த தால் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி எட்டு தொழிலாளர்கள் உயிரிழந்ததோடு 57 பேர் காயமடைந்தனர். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. இரசாயன உலை அமைந்துள்ள பகுதியைச் சூழவுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (2-5-8)

## எமது பிரச்சினை
# எம்மால் தீர்க்கப்படும் மூன்றாமவர் தேவையில்லை
## இந்தியா-சீனா திட்டவட்டம்

(பீஜிங்)

இந்திய- சீன எல்லை பிரச்சினையை தீர்க்க இரு நாடுகளுக்கும் தனி வழிமுறைகளும் தகவல் தொடர்புகளும் உள்ளன. பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் திறன் இரு நாடுகளுக்கும் உள்ளது. எனவே, மூன்றாம் நாட்டின் தலையீடு தேவையில்லை என சீனா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இந்திய-சீன எல்லைப் பிரச்சினையில் சமரசம் செய்து வைக்கத் தயார் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் அறிவித்தார். ஆனால், அவரது விருப்பதை இந்தியாவும், சீனாவும் நிராகரித்தன.

கடந்த திங்கட்கிழமை பிரதமர் மோடியும், ட்ரம்பும் தொலைபேசியில் எல்லைப் பிரச்சினை குறித்து ஆலோசனை நடத்தினர்.

இந்நிலையில், மோடி-ட்ரம்ப் உரையாடல் குறித்து சீன வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் ஜாவோ லிஜியன் நிருபர்களிடம் தெரிவிக்கையில்,

இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினையில் சீனாவின் நிலைப்பாடு உறுதியானது, தெளிவானது. இருநாட்டுத் தலைவர்களிடையே ஏற்பட்ட கருத்தொற்றுமையை இரு நாடுகளும் அமுல்படுத்தி வருகின்றன.

தற்போது எல்லையில் நிலைமை சீராகவும், கட்டுப்பாட்டுக்குள்ளும் இருக்கிறது.

எல்லைப் பிரச்சினையை தீர்க்க இரு நாடுகளுக்கும் தனி வழிமுறைகளும் தகவல் தொடர்புகளும் உள்ளன. பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் திறன் இரு நாடுகளுக்கும் உள்ளது.

எனவே, மூன்றாம் நாட்டின் தலையீடு தேவையில்லை. தேசிய இறையாண்மையை உறுதி செய்வதுடன், எல்லையில் அமைதியையும் ஸ்திரத்தன்மையையும் கட்டிக்காக்க உறுதி பூண்டுள்ளோம் என தெரிவித்தார். (2-5)

# கொரோனா சிகிச்சைக்கு ஹைட்ராக்சி குளோரோகுயின் மீண்டும் பரிசோதனைக்கு உலக சுகாதார அமைப்பு ஒப்புதல்

(ஜெனிவா)

கொரோனா சிகிச்சைக்கு ஹைட்ராக்சிகுளோரோகுயின் மாத்திரையை மருத்துவ பரிசோதனைக்கு பயன்படுத்த உலக சுகாதார அமைப்பு மீண்டும் ஒப்புதல் அளித்துள்ளது.

கொரோனா வைரஸிற்கு எதிரான சிகிச்சையில் மலேரியா தடுப்பு மருந்தான ஹைட்ராக்சி குளோரோகுயின் மாத்திரை நல்ல பலனை அளித்ததாக தகவல் வெளியானது. இதே கருத்தை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

மலேரியா தடுப்பு மாத்திரை தயாரிப்பில் இந்தியா முன்னணி வகிக்கிறது. இதையடுத்து இந்தியாவிடம் இருந்து அமெரிக்கா ஹைட்ராக்சி குளோரோகுயின் மாத்திரையை இறக்குமதி செய்தது. உலக அளவில் அந்த மாத்திரை தேவை அதிகரித்தது.

இதற்கிடையே, மலேரியா தடுப்பு மாத்திரை கொரோனா சிகிச்சையில் பலனளிக்கவில்லை. மேலும் சில ஆய்வுகளிலும் மலேரியா தடுப்பு மாத்திரை பலன் அளிக்கவில்லை என்று அமெரிக்க நிபுணர்கள் கருத்து தெரிவித்தனர்.

தி லான் கேட் மருத்துவ ஆய்வுகள் வெளியிட்ட ஆய்வறிக்கையில், கொரோனா சிகிச்சையில் ஹைட்ராக்சி குளோரோகுயின் மாத்திரை பாதுகாப்பானது அல்ல. இதய நோய் பாதிப்பு வருவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக தெரிவித்தது. மேலும் வெண்டிலேட்டரை பயன்படுத்த வேண்டிய தேவையைக் குறைக்கவில்லை. இதனால் இறப்பு விகிதம் அதிகரித்துள்ளது எனக் கூறியுள்ளது.

இதையடுத்து, கொரோனா சிகிச்சைக்கு ஹைட்ராக்சி குளோரோகுயின் மாத்திரையை மருத்துவ பரிசோதனைக்கு பயன்படுத்துவது பாதுகாப்பு அச்சம் கருதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது.

இந்நிலையில், ஹைட்ராக்சி குளோரோகுயின் என்ற மலேரியா மருந்தை கொரோனாவுக்கு எதிராக மருத்துவ பரிசோதனைகள் செய்ய உலக சுகாதார அமைப்பு மீண்டும் ஒப்புதல் வழங்கியுள்ளது.(2-5)

## இராசிபலன்

05.06.2020
வைகாசி 23, வெள்ளிக்கிழமை
பூரணை பின்னிரவு 1.32 மணிவரை
அனுசம் மாலை 5.30 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை
சந்திராஷ்டமம்:- அச்சுவினி, பரணி
பொசன் முழு நோன்மதி தினம், பூரணை வளவன்

**மேஷம்** மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தன்னம்பிக்கை துளிவிடும் நாள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, உடல் நலன் சீராகும்.

**சிம்மம்** தொலைபேசி வழித்தகவல் ஆச்சரியப்பட வைக்கும், உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக் காணும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், நீண்ட நாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம், உடன் பிறப்புக்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர்.

**துலாம்** உங்கள் பொறுமைக்கு வெகுமதி கிடைக்கும், புதிய பொறுப்புக்களும், பதவிகளும் வந்து சேரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** குடும்பத்தினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வழிபாடு குதூகலம் தரும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், விரும்பிய காரியம் விரும்பிய படியே கைகூடும்.

**தனுசு** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவர்கள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், கௌரவமான நாள்.

**மீனம்** விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

உடல் வேதனையை விட மனவேதனையே மோசமானது.

# கட்டுப்பாட்டில் தேர்தல் நடைபெறும் என்றால் நாம் அதனை எதிர்கொள்ளத் தயார்

## ஜே.வி.பி.கூறுகிறது

**(கொழும்பு) கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டில் தேர்தல் நடைபெறும் என்றால் அதனை எதிர்கொள்ள தாம் தயாராக இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே கருத்துத்து தெரிவித்த அவர், பொதுத் தேர்தல் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு எந்த ஆபத்தையும் ஏற்படுத்தக்கூடாது எனச் சுட்டிக் காட்டினார்.

மேலும் ஊரடங்கு உத்தரவு தினமும் இரவில் அமுல்படுத்தப்படுகின்றது என்றும் இந்த செயற்பாடே இன்னும்கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை அறிவுறுத்துகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.



அத்தோடு எதிர்காலத்தில் தேர்தல் தொடர்பான பணிகளில் ஈடுபடும் அரசாங்க அதிகாரிகளைப் பாதுகாக்க போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்யுமாறும் விஜித ஹேரத் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டார்.

தேர்தல் திகதி அறிவிக்கப் பட்டவுடன் அரசியல் கட்சிகள் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். எவ்வாறாயினும், பொதுக் கூட்டங்கள் மற்றும் தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சூழல் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஜ-4)

# “உயிர்ப் பல்வகைமை- இயற்கைக்கொரு வாய்ப்பு” எனும் தொனிப்பொருளிலான உலக சுற்றாடல்தினம்

## ஜனாதிபதி கோட்டாபய பங்கேற்பு



(கொழும்பு)

உலக சுற்றாடல் தினமான இன்று மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பல விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. “உயிர்ப் பல்வகைமை - இயற்கைக் கொரு வாய்ப்பு” எனும் தொனிப் பொருளின் ஊடாக சுற்றாடல் மற்றும் வனஜீவராசிகள் வளங்கள் அமைச்சினால் இத்தடவை உலக சுற்றாடல் தினத்தைக் கொண்டாடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையானதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை பல விசேட நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கவுள்ளது.

இதற்கிணங்க மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் மரநடுகைக் கருத்திட்டங்கள், நாடளாவிய பாடலாக்க மற்றும் புகைப்படப் போட்டி என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு கொரோனா தொற்றுநோய்க் காலப்பகுதிக்குள் கொழும்பு நகரத்தின் சுற்றாடல் இயல்பினை வெளிக்காட்டுகின்ற ஒளிநாடாவொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

உலக சுற்றாடல் தினத்தின் நிமித்தம் சுற்றாடல் மற்றும் வனஜீவராசிகள் வளங்கள் அமைச்சு தனது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுடன் கூட்டாக இலங்கையிள் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கத்தக்கதாக மரநடுகைக் கருத்திட்டமொன்றை ஏற்பாடு செய்துள்ளதோடு இதன் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்துவமான பழமரக் கன்றுகள் பிரதேசத்தின் மதவழிபாட்டு நிலையங்களில் நடுகை செய்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன்போது கேகாலை, மாத்தறை மற்றும் பதுளை ஆகிய மூன்று மாவட்டங்களினதும் மரநடுகைக் கருத்திட்டம் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கிணங்க இந்த மாவட்டங்களில் பௌத்த, இந்து, கத்தோலிக்க மற்றும் இஸ்லாமிய மதவழிபாட்டு நிலையங்களில் உலக சுற்றாடல் தினத்தன்று இந்த பழமரக் கன்றுகளை நடுகை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

“இலங்கையின் விசித்திரமான உயிர்ப்பல்வகைமை” எனும் தொனிப்பொருளின் ஊடாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நாடளாவிய பாடலாக்க மற்றும் புகைப்படப் போட்டிக்காக தீவின் பல்வேறு திசைகளிலிருந்தும் பாடலாக்கங்களும் பெருந்தொகையான புகைப்படங்களும் கிடைத்துள்ளதோடு இன்றளவில் சம்பந்தப்பட்ட சிறந்த ஆக்கங்களை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாட்டில் நிலவுகின்ற நடப்பு நிலைமைகளை கருத்திற்கொண்டு இந்தப் போட்டியை முழுமையான இணைய வழி (online) முறையூடாக நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இறுதிப் போட்டி முடிவுகள் வெகுசன ஊடகங்கள் மூலமாகவும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் www. cea.lk இணையத்தளம் ஊடா கவும் வெளியிடப்படவுள்ளன.

கொரோனா தொற்றுக்காலத்திற்குள் கொழும்பு நகரத்தின் சுற்றாடல் தன்மைகள் பற்றி மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் 10 நிமிட ஒளிநாடா வொன்று தயாரிக்கப்பட்டுள்ளதோடு உலக சுற்றாடல் தினமான இன்று உலக சுற்றாடல் தின பிரதான நிகழ்ச்சி நடத்தப்படுகின்ற மிஹிந்தலை வழிபாட்டுத் தலத்தில் அந்த ஒளிநாடா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் காணி, காணி அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் வனஜீவராசிகள் வளங்கள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பி.பீ. ஹேமந்த ஜயசிங்க உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் பங்கேற்கவுள்ளனர். (ஜ-4)